**செய்தி வெளியீடு எண்: 428** **நாள்: 03.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 2.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு HD செட்டாப் பாக்ஸ்கள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, 5 சந்தாதாரர்களுக்கு HD செட்டாப் பாக்ஸ்களை வழங்கி துவக்கி வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உயர் வரையறை தரத்திலான (High Definition) ஒளிபரப்பு சேவை, வருவாய்த் துறையின் சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்ட UMANG செயலி, பொதுமக்களுக்கான திறந்தநிலை சேவைதளம் ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் கடந்த 1.6.2018 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அதன் சந்தாதாரர்களுக்கு தற்போது தரமான வரையறையில் (SD-Standard Definition) டிஜிட்டல் கேபிள் டிவி சேவை வழங்கி வருகிறது. அதனை மேம்படுத்தும் விதமாக, உயர் வரையறை (HD-High Definition) தரத்தில் மிக துல்லியமான சேவை 'HD செட்டாப் பாக்ஸ்' வாயிலாக வழங்கப்படும்" என்று அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு HD செட்டாப் பாக்ஸ்கள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 5 சந்தாதாரர்களுக்கு HD செட்டாப் பாக்ஸ்களை வழங்கி துவக்கி வைத்ததுடன், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் HD ஒளிபரப்பு சேவையையும் துவக்கி வைத்தார்கள்.

தற்பொழுது SD செட்டாப் பாக்ஸ்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. HD ஒளிபரப்பு சேவை உயர் சந்தை தேவையை பூர்த்தி செய்வதால், இச்சேவையை விரும்பும் அனைத்து சந்தாதாரர்களுக்கும் HD செட்டாப் பாக்ஸ்கள் குறைந்த விலையான ரூ.500/–க்கு உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக வழங்கப்படும். மேலும், தற்பொழுது துவங்கப்படும் HD ஒளிபரப்பு சேவையில், மூன்றாவது தொகுப்பாக 380 SD சேனல்களுடன், 45 HD சேனல்களும் சேர்த்து மொத்தம் 425 சேனல்கள் ரூ.225+GST என்ற மாத கட்டணத்தில் வழங்கப்படும்.

இந்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (Ministry of Electronics and Information Technology, Government of India) செயல்படுத்தப்பட்டு வரும், தேசிய மின் ஆளுமை திட்டத்தின் மூலம் அலைபேசி ஆளுமைக்காக, புதுயுக ஆளுகைக்கான பொது அலைபேசி செயலி (UMANG –

Unified Mobile Application for New Age Governance) தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுத் துறைகள் முதல், உள்ளாட்சித் துறைகள் வரை நாடு முழுவதும் மின்னாளுமை மூலம் வழங்கப்பட்டு வரும் சேவைகளை ஒரே தரவுதளத்தின் கீழ் இச்செயலி வழங்கும்.

தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மூலம் மின்மாவட்டத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுவரும் சேவைகளில் முதற்கட்டமாக, வருவாய்த் துறையைச் சேர்ந்த மூன்று சேவைகளான சாதி சான்றிதழ், வருவாய் சான்றிதழ் மற்றும் பிறப்பிட / இருப்பிட சான்றிதழ் ஆகியவை UMANG செயலியில் ஒருங்கிணைக்கப்பட்டு, அதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். பொதுமக்கள் தமது ஸ்மார்ட் போன்களில் இச்செயலியினைப் பதிவிறக்கம் செய்து, அதன்மூலம் விண்ணப்பித்து இச்சான்றிதழ்களைப் பெற முடியும். இச்செயலியின் மூலம் தமிழ்நாட்டு மக்கள் 24x7 நேரமும் அரசின் சேவைகளைப் பெற்றிட முடியும்.

மேலும், பொதுமக்களுக்கான அரசுத் துறைகளின் 63 சேவைகள் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுசேவை மையங்கள்/ இ–சேவை மையங்கள் வழியாக மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் மே மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை சான்றிதழ்கள் பெற உச்சகட்ட காலம் என்பதால் பொதுமக்கள் பெருமளவில் இம்மையங்களை அணுகுவதால் ஏற்படும் நெரிசலைத் தவிர்த்திடும் விதத்திலும், தமிழ்நாடு அரசால் மின்மாவட்டத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுவரும் சேவைகளை இணையதளம் மூலம் பொதுமக்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே 24x7 நேரமும் எளிதில் விண்ணப்பித்துப் பெற்றிடும் வகையிலும், 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், www.tnsevai.tn.gov.in/citizen என்ற திறந்தநிலை சேவைதளம் (Open Portal) தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாக வருவாய்த்துறையின் 20 சான்றிதழ் சேவைகள் வழங்கப்பட உள்ளது. இந்த பொதுமக்களுக்கான திறந்தநிலை சேவைதளத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலாளர் டாக்டர் சந்தர மோகன். பி, இ.ஆ.ப., மின்னாளுமை ஆணையர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் திரு.ஆனந்தராவ் விஷ்ணு பாட்டீல், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஏ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**